

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் கே. திராவிட பக்தன், தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் க.அரிகிருஷ்ணன், ஏற்பாட்டில் நடைபெற்றது . இதில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம். எல். ஏ. கலந்து கொண்டு கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் திராவிடம் மாடல் ஆட்சி நான்கு ஆண்டு சாதனை குறித்து விளக்கி பேசினார். உடன் தலைமை கழக பேச்சாளர் முஜிபுர்ரஹ்மான், ஆர்.டி.இ. ஆதிசேஷன், பி.கே. நாகராஜ், கொப்பூர் திலிப் குமார், என்.நந்தகோபால், கே.ஏ.மதியழகன், தி.ஆ, கமலக்கண்ணன், ஆர்.வாசு, ஆர்.ரமணன், செங்குட்டவன், தட்சிணாமூர்த்தி, குருசாமி, காசிலிங்கம், ஜெய்சங்கர், லோகநாதன், முரளி, அன்பழகன், வசந்தி, பிரேமலதா, ஜெயசித்ரா, லட்சுமி தேவி, அன்னபூரணி, விஜயா, ப.வெங்கடேஷ், உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நான்காண்டு

# சாதனை விளக்க பொதுக்கூட்டம் - 5 ஆயிரம் பேருக்கு நல உதவிகள்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் வழங்கினார்!

திருவள்ளூர் மே 16;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் நான்காம் ஆண்டு சாதனை விளக்கம் பொதுக்கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்றது இதில் அவைத்தலைவர் ஆ.ராஜா கிளைக் கழக செயலாளர் எம்.டி.ஜி. கதிர்வேல், முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து. தமிழரசன், ஒன்றிய கழக நிர்வாகிகள் மோகனசுந்தர் தசரதன் தாஸ் ஆ.பாளையம் , செல்வமணி , ரவிச்சந்திரன், இந்திரா சங்கர், எம்.டி.ஜி.வடிவேல் ,ராமமூர்த்தி, சா.ரவி, ரவிச்சந்திரன், ராஜசேகர், எஸ். ஸ்டாலின், எல்.ஜீவா, ராஜாபதர், ஸ்டேவன், மோ.ராஜீவ்காந்தி, சற்குணம், குத்தூஸ், வி.கே. சுரேஷ் , கஜேந்திரன்ராஜன் ,விஸ்வநாத் பிரசாந்த், எ. ராஜா ஆகியோர் வரவேற்பு உரையாற்றினார்கள்

மாவட்ட கழக நிர்வாகிகள் மு.பகலவன், ஜெ. மூர்த்தி, மு.கதிரவன், கே.வி. ஜி.உமா மகேஸ்வரி, எம். எல்.இரவி, ஏ.வி.இராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், வெங்கடாசலபதி, பரிமளம் விஸ்வநாதன், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, நன்னிலம் சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் நான்காம் ஆண்டு சாதனைகளை குறித்து விளக்கி பேசினார்

இதில் தொடர்ந்து பேசிய மாவட்ட கழக பொறுப்பாளர் கடந்த 10 ஆண்டுகளாக அதிமுக ஆட்சியில் சீரழிந்து கிடந்த தமிழகத்தை நான்கு ஆண்டுகளில் மீட்டெடுத்த பெருமை தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களை சாறும் எனவும். தற்போது நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பாகவும் தொழில் முனைவர்களாகவும் இருந்து வருகின்றனர் எனவும் பள்ளி கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து தமிழகத்தை முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருவதாகவும் 2026 சட்டமன்றத் தேர்தலிலும் திராவிட மாடல் ஆட்சி அமையும் எனவும் தெரிவித்தனர். கூட்டத்தில் கலந்து கொண்ட 5000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சில்வர் பாத்திரம் கொடை உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன

இதில் மாநில நிர்வாகிகள் கே. ஜி பாஸ்கர் சுந்தரம் வே அன்புவாணன் ஜி ஸ்டாலின் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் கே. வி. ஆனந்தகுமார், ஜான் பொன்னுசாமி, பி.முத்து தமிழ் உதயன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஜி.பி.வெங்கடேசன், சம்பத் ஏகே.சம்பத்குமார் , முகமது அலவி, தனசேகரன், கோபி, சுமன் , ஆறுமுகம், ஜெயலலிதா சசிதரன், தேசராணி தேசப்பன், மா.தீபன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வல்லூர் டாக்டர் எம்.எஸ். கே.ஆர். ராஜ்குமார் நன்றி கூறினார்.

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., தலைமை!

# அம்பத்தூர் வடக்கு பகுதியில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## தலைமைக் கழகப் பேச்சாளர் தமிழ் சாதிக் சிறப்புரை!



சென்னை,மே.16-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதியில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம், அம்பத்தூர் ஓடி பேருந்து நிலையம் அருகில் 12.05.2025 திங்கட்கிழமை மாலை 6.00 மணியளவில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப்சாமுவேல் தலைமையில், கழக பொருளாளரும் மக்களவைக்குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தலைமைகழக பேச்சாளர் தமிழ் சாதிக் சிறப்பு பேச்சாளராக பேருரையாற்றினார்.

இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் சன்.பி.முனியாண்டி தொகுதி பொறுப்பாளர், மரு.அணி.அமைஜி.சாந்தகுமாரி எம்.சி., மா.ஆதி.நல.அ LPF. மோகன், ஏ.பி.பூர்ணிமா எம்.சி., மா.சுற்று.அ.அ ஜீ. வி.நாகவள்ளி எம்.சி.,, மா.மீனவ.அமை து.ஆயிரம், மா.அமை.ஒட்.அ.அ. கு . கிருஷ்ணமூர்த்தி மா.இளை.அ.அ ஜெ.பாலமுருகன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி எம்.சி., எஸ்.உமா எம்.சி.,, உஷாநாகராஜ் எம்.சி., எம்.இ.சேகர் எம்.சி., வடக்கு,தெற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் க.முரளிபாபு அ.செல்வம், க.கதீஜா மா.ரமேஷ், நடராஜன் செல்வராஜ் கதிரவன் து.ஜெகநாதன் பி.ஆர். இளங்கோவன் பா.பொற்செழியன், ராமு

நடராஜன் து.செல்வராஜ் கவிதா செல்லதுரை சங்கர் ஆகியோர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் வி. ரவீந்திரன் பு.வீரா வெ.இராதாகிருஷ்ணன் த.கண்ணபிரான் எம்.கமல்எம்.சி., சீனிவாசன் எம்.இ.சேகர் எம்.சி., நா.நெப்போலியன் பிரகாஷ்குமார் ஆர்.டீக்கா, சண்முகம் சுந்தர்ராஜன் லோகநாதன் மோகன்குமார் விஜயகுமார் த.வ.லால் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் பி.வி.மூர்த்தி பொன்.நவராஜ்ரவி, க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன் மா.குப்புசாமி எம். ஹரிகிருஷ்ணன் எம்.குணசேகரன், ப.மதி ஆ. இரா,அருண் கோ.சேகர்லால், பா.மதி ,க.ஜீவா, மா.குப்புசாமி சேதுராமன், பாஷ்கரன் சுரேஸ்பாபு ஜெயராமன், மதியழகன் சவரிமுத்து, ராஜ்குமார் கோதண்டன், இன்பசேகரன் கலந்து கொண்டார்கள். அம்பத்தூர் வடக்கு பகுதி 81வது வட்ட கழக செயலாளர் மு.இரகு நன்றியுரை வழங்கினார். இதில் அம்பத்தூர் தொகுதி கழக நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள், தொகுதி பாகநிலை ஒருங்கினைப்பாளர்கள் பல்வேறு அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.



செங்குன்றம் பேரூர் 11வது வார்டில் முதல்வர் பிறந்தநாளையொட்டி ஒன்றிய செயலாளர் ச.அற்புதராஜ் நல உதவிகளை வழங்கினார். பேரூராட்சி துணைத் தலைவர் ஆர்.இ.ஆர். விப்ரநாராயணன் தலைமையில் தமிழரசி குமார், அருள், தேவநேசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## 2026 ஆம் ஆண்டில் கழகம் பெறவிருக்கும் தேர்தல் வெற்றிக்கு

# கட்டியம் கூறும் மதுரை மாவட்டம், உத்தங்குடியில் நடைபெறும் பொதுக்குழு!



மதுரை மாவட்டம் உத்தங்குடி அருகில் உள்ள திடலில் மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் அமைச்சர் மூர்த்தி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தை ஜூன் திங்கள் முதல் நாள் நடத்துவதற்கான ஏற்பாடுகளை, மதுரை மாவட்டக் கழக நிர்வாகிகளோடு இணைந்து மின்னல் வேகத்தில் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

பகல் இரவு வேறுபாடின்றி எல்லா நேரங்களிலும் பொதுக்குழுவிற்கான பணிகள் திட்டமிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜூன் திங்கள் முதல் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், தமிழ்நாட்டின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்க, தலைமை கழகத்தின் நிர்வாகிகளும், மாவட்டக் கழகத்தின் நிர்வாகிகளும், பிற மாநில நிர்வாகிகளும், அயலகப் பிரதிநிதிகளும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பாளர்களும் கலந்து கொள்ளும் மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் ஓர் முக்கிய இடத்தை பெருமளவிற்கு ஏற்பாட்டில் மட்டுமல்லாமல், வார்த்தெடுக்கும் தீர்மானங்களின் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் வீரர்களுக்கு புதிய தெம்பையும், உற்சாகத்தையும் நிச்சயம் உருவாக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அடிக்கடி குறிப்பிட்டதை போல, "கழகத்தின் இதயமாகும்".

இங்குதான் கொள்கை பிரகடனங்களுக்கான அரசியல் தீர்மானங்கள் தொலைநோக்கு பார்வையோடு வார்த்தெடுக்கப்படும். திராவிட மாடல் ஆட்சியின் மூலம் மாநில சுயாட்சிக்கும், மகளிர் உரிமைக்கும், இருபால் இளைஞர்களின் கல்விக்கும், வேலை வாய்ப்பிற்கும், அடித்தட்டு மக்களின் உறைவிடத்திற்கான கட்டுமான ஏற்பாடுகளுக்கும், ஏற்றத் தாழ்வற்ற சமுதாய அமைப்பிற்கும், "எல்லோருக்கும் எல்லாம்" என்ற சமதர்ம, சமூகநீதி கோட்பாட்டிற்கும், இந்திய ஒன்றியத்திற்கு சரியான திசை வழிகாட்டும் ஆட்சியாக தமிழக முதல்வர் கடந்த நான்காண்டு காலம் சிறப்புடன் நடத்திக் காட்டியுள்ளார் என்பதற்கான விள க்கங்களும், விபரங்களும் வெளிப்படுத்தப்படும். திராவிட மாடல் ஆட்சியின் மாண்பையும், தாக்கத்தையும் சாதாரண மக்களிடம் உருவாக்கியிருக்கின்ற பேரெழுச்சியையும் கண்டு, அச்சமடைந்த மதவாத சக்திகளின் புகலிடமாக தங்களை பிரகடனப் படுத்திக் கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசு பன்முகத் தாக்குதலை தமிழக அரசின் மீது தொடுத்துள்ளது என்பதை விரிவாக விளக்க வேண்டிய அவசியமில்லை.



தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர். எஸ்.எஸ். என்ற மதவாத அமைப்பின் நேரடி பிரதிநிதியாகவே செயல்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டின் அரசுக்கு நிகரான ஓர் ஆட்சியை நடத்துவதில் பெரும் முயற்சி மேற்கொண்டுள்ளார். தமிழக அரசினுடைய மக்கள் நலத் திட்டங்களையும், மக்கள் பாதுகாப்புச் சட்டங்களையும் தடுப்பதிலும், தாமதப்படுத்துவதிலும் ஆளுநர் ரவி, தன் பதவிக் காலத்தை முழுமையாகப் பயன்படுத்தினார் என்பதற்கு விளக்கம் விரிவாக தேவையில்லை என்றே கருதுகிறேன். தமிழக முதல்வர் ஆளுநர் ரவியின் அரசியல் சட்டத்திற்கு முரண்பட்ட நடவடிக்கைகள் ஒன்றிய அரசால் கண்காணிக்கப்படும், தடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்போடு பொறுத்திருந்தார், நிதானம் காட்டினார்.

ஆனால், ஒன்றிய அரசு இது குறித்து உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காத சூழ்நிலையில், ஆளுநர் ரவியின் அதிகார ஆக்கிரமிப்புகள் மேலும் தொடர்ந்த காரணத்தினால்தான், தமிழ்நாட்டின் முதல்வர், தக்க சூழ்நிலையில், மிகச் சரியான காலகட்டத்தில் உச்ச நீதிமன்றத்தை அணுகினார்கள். ஆளுநரின் நடவடிக்கையும், அரசியல் சட்டத்தினுடைய பிரிவுகளையும் ஆய்வு செய்த உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் இந்திய அரசியல் சட்டத்தின் 142வது பிரிவின் கீழ், தங்கள் தீர்ப்பின் முடிவுகளை வெளிப் படுத்தினார்கள். அரசியல் சட்டத்தின் 142வது பிரிவின் கீழ், உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவது, தவிர்க்க முடியாத, நீதியை நிலை நாட்ட வேண்டுமென்ற கட்டாயத்தின் அடிப்படையில்தான், அந்தப் பிரிவின் கீழ் தீர்ப்பு வழங்கப்படும். எனவேதான், இந்தத் தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு மட்டுமல்ல, ஜனநாயகத்தை சீர்குலைக்கும் சக்திகளை தடுத்திடும் ஓர் மகத்தான தீர்ப்புமாகும்.




**பொன் முத்துராமலிங்கம்**

முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை
செயல்திட்டக் குழு
உறுப்பினர்


அதுமட்டுமல்ல, அரசியல் சட்டத்தினுடைய நோக்கத்தையும் ஆழமாக புரிந்து கொண்டு, ஜனநாயகத்தை நிரந்தரமாகப் பாதுகாக்கும் தீர்ப்பு என்பது, மிகையான கூற்று அல்ல. இப்படி தமிழக முதல்வரின் புரட்சிகரமான, முன்மாதிரியான பல்வேறு திட்டங்களையும், சட்டங்களையும் தடுத்து நிறுத்துவதிலும், காலதாமதப்படுத்துவதிலும் இது போன்று எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்களை ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி கருவியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையை, உச்சநீதிமன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பு தகர்த்து தரைமட்டமாக்கியிருக்கிறது. இதுபோன்றுதான் ஒன்றிய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையோடு எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டப்படுகிறது. இதுமட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டத்தில் அதிகாரங்கள் ஒன்றியத்திற்கும், மாநிலங்களுக்கும் பிரித்து பட்டியலிடப்பட்டுள்ளது. இது தவிர்த்து மாநிலங்களும், ஒன்றியமும் ஒத்திசைந்து நிறை வேற்றக்கூடிய அதிகாரத் தொகுப்பு (Concurrent list)தனியாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த ஒத்திசைவுப் பட்டியலில் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையும் ஒன்றிய அரசே எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகிறது. 1975 1976ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலைமை அமலில் இருந்த பொழுது மாநில பட்டியலில் இருந்த "கல்வி" (Education) ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டதைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு, "கல்வி" தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. வரம்பு மீறிய ஒன்றிய அரசின் பிடிவாதத்தால் "நீட்" தேர்விலிருந்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கு விலக்கு கிடைக்கவில்லை. இதனால், எத்தனை மாணவச் செல்வங்கள் பலியாகி உள்ளார்கள் என்பது நாடறிந்த துயரச் செய்திகளாகும்.

இதுபோன்று ஒன்றிய அரசின் சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் "குடியுரிமை திருத்தச் சட்டம்", விவசாயிகளை அச்சுறுத்தும் "வேளாண் சட்டங்கள்", பல்கலைக்கழகங்களில் சுயாட்சித் தன்மையை சீர்குலைக்கும் திருத்த சட்டங்கள், நேர்மையான தேர்தல்களை சீர்குலைக்கும் "தேர்தல் திருத்தச் சட்டங்கள்", இதற்கிடையில் இந்தி மொழியை வலுக்கட்டாயமாக இந்தி பேசாத வெவ்வேறு தாய் மொழிகளை கொண்ட மக்கள் மீது திணிக்கின்ற நேரடியானதும், மறைமுகமானதுமான முயற்சிகள் ஆகிய ஒன்றிய பா.ஜ.க. அரசின் இத்தகைய முயற்சிகள் அனைத்தும் "ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற இலக்கு நோக்கிதான் என்பது மட்டும் உறுதியானது.

அந்த ஒரே நாடு "இந்துராஷ்ட்ரம்", இந்துராஷ்ட்ரத்தை தாங்கி நிற்கும் ஒரே கோட்பாடு "இந்துத்துவா" என்ற வேத கால வர்ணாசிரம கலாச்சாரம் என்ற சனாதனக் கோட்பாட்டின் மறுவடிவமாகும்.

பாரதிய ஜனதாக் கட்சியும், அந்தக் கட்சியின் சித்தாந்த வழிகாட்டியான இராஷ்டிரிய சுயம்சேவக்சங் மேற்கொண்டிருக்கும் இந்த சித்தாந்த போர் முழக்கத்தை அடையாளம் கண்டு, இத்தகைய ஆரிய பண்பாட்டுப் படையெடுப்பை தடுத்து நிறுத்தும் மகத்தான சக்தியாக திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், மதுரை மாவட்டம் உத்தங்குடி திடலில் நடைபெறவுள்ள பொதுக்குழு கூட்டத்தில் மதவாத சக்திகளை வீழ்த்தி, "எல்லோருக்கும் எல்லாம்" என்ற சமத்துவ சமுதாயத்தை முழுமையாக உருவாக்குவதற்கும், இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமையை நிரந்தரமாகக் காப்பாற்றி வலிமையுள்ள இந்திய ஒன்றியமாக மாற்றுவதற்கான ஒரே வழி "மாநில சுயாட்சி" தான் என்பதையும் வலியுறுத்தி, முழுமையான அனைத்து அதிகாரங்களையும் பெற்ற, மாநிலங்களை உள்ளடக்கிய வலிமையான இந்திய ஒன்றியத்தை யும், மதச்சார்பற்ற அரசையும் உருவாக்குவதற்கான திசைவழி காட்டும் மிகப்பெரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த "உத்தங்குடி பொதுக் குழு" அமையும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்
குறள் 517

என்ற வள்ளுவரின் வழிகாட்டுதல்படி, வரலாறு படைக்கவிருக்கும் இந்த பொதுக் குழுவை மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மூர்த்தி வசம் ஒப்படைத்தால்தான் சரியாகயிருக்கும் எனக் கருதித் தான் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர் வசம் ஒப்படைத்துள்ளார்கள்.

மாவட்டக் கழகச் செயலாளர் மூர்த்தி தன் உழைப்பால், அரவணைப்பால், பொதுக்குழு நிகழ்ச்சியினை வெற்றியடையச் செய்து நிச்சயம் கீர்த்தியின் சிகரத்தை அடைவார் என்பது உறுதி. இந்தப் பொதுக்குழு ஏற்பாட்டில் அனைவராலும் பாராட்டத் தகுந்த சிறப்பு அம்சம் எதுவெனில், பொது மக்களுக்கோ, போக்குவரத்துக்கோ, துளியளவு கூட சங்கடமில்லாமல், இயல்பு நிலை பாதிக்காமல், கட்டமைக்கப்பட்டுள்ள பந்தல் அமைப்பும், போக்குவரத்து ஏற்பாடும்தான்.

எனவே, தென்பாண்டி மண்டலத்திற்குப் பெருமை சேர்ப்பதோடு நடைபெறவிருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெறுவதற்கான கட்டியம் கூறும் பொதுக்குழுவாகவே நிச்சயம் இருக்கும். பொதுக்குழு நிகழ்ச்சிக்கு வருகை தரும் கழகத் தலைவர், முதல்வர், திராவிட இயக்கத்தின் நாற்றங்கால் எனக் கருதப்படுகின்ற அழகரடிப் பகுதியில் மதுரை மாநகரத்தின் முதல்மேயர், திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி முத்தண்ணன் அவர்களது வெண்கலச் சிலையை 31.05.2025ம் நாள் திறந்து வைப்பது பெருமைக்குப் பெருமை சேர்க்கும் தியாகத் திருநாளாகக் கருதப்படும். சுருக்கமாகக் கூற வேண்டுமெனில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வரின் மாமதுரைக்கு வருகைதரும் நிகழ்ச்சி, திராவிட இன எழுச்சியின் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக அமையும் என்பதோடு, இனி எதிரிகளை திக்குத் தெரியாமல் சிதறி ஓட வைக்கும் பொதுக்குழுவாக அமைந்திட அனைவரும் அணி திரள்வோம் தென்பாண்டி மண்டலத்தின் பெருமை காப்போம்.